யா/ஹாட்லிக் கல்லூரி,பருத்தித்துறை.

# J/ Hartley College, Point Pedro.

முதலாம் தவணைப் பரீட்சை–2020 – தரம் 11

## First Term Examination – 2020 – Grade 11

| | | | | |
|---|---|---|---|---|
| சைவசமயம் | 12 | T | I, II | மூன்று மணித்தியாலம் Three Hours |

சுட்டெண் Index No

## சைவசமயம்

### பகுதி - I

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01. உலகிலே யாவற்றிற்கும் மேலான பரம் பொருளை குறிப்பதற்கு தமிழிலே வழங்கப்படும் சொல்
    1. பரம் பொருள் 2. கடவுள் 3. இறைவன் 4. பசுபதி

02. ஆன்மாக்களில் மலபந்தத்திலிருந்து முற்றாக நீக்கி அவற்றுக்குப் பேரின்பத்தைக் கொடுக்கும் ஐந்தொழில்களில் ஒன்று
    1. காத்தல் 2. மறைத்தல் 3. அருளல் 4. படைத்தல்

03. விநாயக சஷ்டி விரத காலத்தில் ஆலயங்களில் பாராயணம் செய்யப்படும் நூல்
    1. விநாயகர் அகவல் 2. பெரிய புராணம் 3. கந்தபுராணம் 4. பிள்ளையார் கதை

04. "உள் பொருள் ஒன்றே, அதனையே அறிந்தோர் பல பெயர்களால் வழங்குவர்" எனக்குறிப்பிடும் நூல்
    1. வேதம் 2. ஆகமம் 3. புராணம் 4. இதிகாசம்

05. கடவுள் உண்மையை நிரூபிக்கும் அளவுப்பிரமாணங்களின் எண்ணிக்கை
    1. 5 2. 8 3. 2 4. 3

06. சித்துப் பொருளாக விளங்குவது
    1. கடவுள் 2. உலகம் 3. மாயை 4. பாசம்

07. ''இறைவன் தனு, கரணம், புவனம், போகம் என்பவற்றைப் படைக்கின்றார்'' இதில் ''தனு'' குறித்து நிற்பது
    1. உலகம் 2. உடம்பு 3. தனம் 4. கல்வி

08. கடவுளது பெருமை, கடவுள் மீது காட்டும் கருணை என்பனவற்றை நினைத்து மனமுருகுதல்
    1. ஆன்மீக தியானம் 2. அறிவுடைமை 3. சிவத்தியானம் 4. ஞான நிலை

09. நாம் "தானதருமம்" செய்தல் வேண்டும். இதில் தருமம் என்பது
    1. ஈகை 2. இரத்தல் 3. வறுமை 4. பொருள்

10. ஒப்புரவாளனைப் "பேரறிவாளன்" என பெருமைபடக் கூறியவர்
    1. திருமூலர் 2. திருவள்ளுவர் 3. ஔவையார் 4. நாவலர்

11. இந்து மரபிலே தனித்தனியான பெயர்களோடு சுழற்சி முறையில் அமையும் ஆண்டுகள்
    1. 12 2. 6 3. 60 4. 2

12. "நீறில்லா நெற்றி பாழ்" என்று கூறியவர்
1. திருவள்ளுவர் 2. சேக்கிழார் 3. ஔவையார் 4. அப்பர்

13. உருத்திராக்கம் என்பதில் "ஆக்கம்" என்பது குறித்து நிற்பது
1. மாலை 2. கண் 3. சின்னம் 4. சிவன்

14. பிரவம் முதல் அட்சயம் வரையிலான ஆண்டு ஒவ்வொன்றும் பிறக்கும் காலம்
1. மகர சங்கிராந்தி 2. கிறிஸ்துவின் பிறப்பு
3. சூரிய மானம் 4. மேட சங்கிராந்தி

15. "அக்கு மாலை கொடு அங்கையில் எண்ணுவார்" எனும் அடி குறித்து நிற்கும் சைவ சாதனம்
1. பசிதம் 2. நமசிவாய 3. உருத்திராக்கம் 4. சிவாயநம

16. இந்து மரபில் சாயா கிரகங்கள் எனப்படுபவை
1. வெள்ளி, சனி 2. இராகு, கேது 3. ஞாயிறு, புதன் 4. வியாழன் , கேது

17. ஒருவரின் இறப்பிற்கு பின் ஒருவருட காலம் வரையில் ஒவ்வொரு மாதமும் அவர் இறந்த திதியில் செய்யப்படுவது
1. திவசம் 2. சிரார்த்தம் 3. அந்தியேட்டி 4. மாசிகம்

18. கிருஸ்ணபட்சம், சுக்கிலபட்சம் என்பவற்றில் உள்ள மொத்த திதிகளின் எண்ணிக்கை
1. 15 2. 8 3. 9 4. 30

19. "நாயகனார் முன்னம் உரைத்த ஆகம நூல்" எனக் கூறியவர்
1. திருமூலர் 2. சேக்கிழார் 3. மாணிக்கவாசகர் 4. திருவள்ளுவர்

20. சந்திரன் நட்சத்திரங்கள் ஊடாக பூமியைச்சுற்றி வர எடுக்கும் காலம்
1. 15 நாள் 2. $27\,^{1}/_{6}$ நாள் 3. 30நாள் 4. 12 மாதம்

21. நட்சத்திரங்களின் எண்ணிக்கை
1 . 27 2. 12 3. 360 4. 60

22. நாற்பாதங்களில் முப்பொருள் உண்மையினை விளக்குவது
1. சரியா பாதம் 2. ஞான பாதம் 3. கிரியா பாதம் 4. யோக பாதம்

23. சிவாகமங்களின் எண்ணிக்கை
1. 10 2. 08 3. 207 4. 28.

24. "பெண்ணில் நல்லவளாயின பெருந்தவக் கொளுந்து" என ஆகமம் பற்றிய கருத்தினைக் கூறியநூல்
1. திருக்குறள் 2. வேதங்கள் 3. பெரியபுராணம் 4. திருமந்திரம்

25. கார்த்திகை மாத தேய்பிறை பிரதமை முதல் மார்கழி மாத வளர்பிளை சஷ்டி வரையுள்ள இருபத்தொரு நாட்கள்
1. கந்த சஷ்டி 2. விநாயகர் சஷ்டி 3. கௌரி விரதம் 4. திருவெம்பாவை

26. "உம்பர் தரு" என்பது குறித்து நிற்பது
1. காமதேனு 2. சிந்தாமணி 3. இறைவன் 4. கற்பகவிருட்சம்

27. "ரிஷி" உன்ற சொல்லின் பொருள்
1. ஞானி 2. நாயன்மார் 3. காண்பவன் 4. அருளாளர்

28. சுந்தரர் வலக்கண் பார்வை பெற்ற தலம்
1. திருவேரகம் 2. திருமருகல் 3. திருவாரூர் 4. சிதம்பரம்

29. ஞான காண்டப் பகுதியாக அமைவது
    1. உபநிடதம் 2. மந்திரம் 3. பிராமணம் 4. ஆரணியகம்

30. தமிழ் வருடங்களின் தற்போதைய வருடத்தின் பெயர்
    1. விகாரி 2. சுபகிருதி 3. சர்வாரி 4. பிலவ

31. திருஞான சம்பந்தர் திருமறைக்காட்டில் கதவு மூடுவதற்கு பாடிய பதிகம்
    1. துணிவளர் திங்கள்.. 2. இடரினும் தளரினும்..
    3. சதுரம் மறை… 4. வாழ்க அந்தணர்…

32. “ஆளும் நாயகன் கயிலையில் இருக்கை கண்டு அல்லால் மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன்” எனக் கூறியவர்
    1. சுந்தரர் 2. சம்பந்தர் 3. சேக்கிழார் 4. அப்பர்

33. சகலாகம பண்டிதர் எனும் சிறப்புப் பெயருக்கு உரியவர்
    1. மெய்கண்ட தேவர் 2. அருணந்தி தேவர்
    3. உமாபதி சிவாச்சாரியார் 4. மறைஞான சம்பந்தர்

34. சுவாமி விபுலானந்தர் ஆசிரியராக இருந்த ஆங்கில மொழிச் சஞ்சிகை
    1. வேதாந்த கேசரி 2. யாழ்நூல் 3. மதங்கசூளாமணி 4. பிரபுத்த பாரத

35. 4286விருத்தப்பாக்களால் அமைந்த நூல்
    1. திருமந்திரம் 2. திருத்தொண்டர் புராணம்
    3. திருத் தொண்டர் திருவந்தாதி 4. திருத் தொண்டர் தொகை

**பின்வரும் அட்டவணையில் A – O வரையில் தரப்பட்டுள்ள தகவல்களைக் கொண்டு 35 – 40 வரையான வினாக்களுக்கு விடைகளைத் தெரிவு செய்க.**

| | | |
|---|---|---|
| A – திருமூலர் | F – திருமறைக்காட்டுக்கதவை திறக்கப்பாடியமை | K – கன்னிகா தானம் |
| B – திருநாவுக்கரசர் | G – இல்லற நிலை | L – திருத்தாண்டகம் |
| C – அருந்ததி | H – தமிழாகமம் | M – அமுதசுரபி |
| D – நாகர்கள் | I – திருமலைச்சருக்கம் | N – 13 சருக்கங்கள் |
| E – சேக்கிழார் | J – வன்னிமரம் | O – 10ம் திருமுறை |

36. தந்திரங்கள் என்ற வகையைத் தந்தவருடன் தொடர்புடையது
    1. AGL 2. AHO 3. BGL 4. DHN

37. ”என் கடன் பணி செய்து கிடப்பதே” எனக் கூறியவரோடு தொடர்புடைய தொகுதி
    1. BFL 2. CJN 3. BHO 4. BIK

38. பூர்வக் கிரியைகளுடன் தொடர்புடைய தொகுதி
    1. CJK 2. EGM 3. CGK 4. EJL

39. பெரிய புராணத்துடன் தொடர்புடையது
    1. EFL 2. EIN 3. DIN 4. DHO

40. ஈழத்து அம்மன் ஆலயத்துடன் தொடர்புடைய தொகுதி
    1. DJO 2. DIL 3. EIO 4. DIM

(40 x 1 = 40 புள்ளிகள்)

## பகுதி – II

**முதலாம், இரண்டாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**

01. மேல்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக
    1. கடவுள் என்ற சொல்லின் பொருள் யாது?
    2. இந்து சமயத்தின் முதல் நூல், சிறப்பு நூல் என்பவற்றைத் தருக.
    3. அறிவுடைமை என்பதன் பொருள் யாது?
    4. ஒப்புரவு எனும் அறச்செயலினை,
       "இன்னறுங்கனிச்சோலைகள் செய்தல்,
       இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்…" எனும் வரிகளால் தந்தவர் யார்?
    5. சிரார்த்தம் என்றால் என்ன?
    6. "அன்பே சிவம்" எனும் உண்மையை வலியுறுத்தியவர் யார்?
    7. சுவாமி விபுலானந்தர் இயற்றிய நாடக நூல் எது?
    8. சத்தினி பாதம் என்றால் என்ன?
    9. திருநீறானது இறைவனது மும்மலங்களை நீக்குவதனால் எப்பெயர் பெறுகின்றது?
    10. ஆகமம் என்ற சொல்லின் பொருள் யாது?

(10 x 2 = 20 புள்ளிகள்)

02. மேல்வரும் பாடல்களுள் இரண்டினை அடிமுறை பிழையாது திருத்தமாக எழுதி, அதன் பொழிப்புரையினையும் தருக.
    1. உம்பர் தருத்தேனுமணிக்…
    2. நாம் ஆர்க்கும் குடியல்லோம்…
    3. தந்தது உன் தன்னைக் கொண்டது…
    4. கற்றவர் விழுங்கும் கற்பக் கனியை…
    5. தண்ணளி வெண்குடை வேந்தன்…..

(5 x 2 = 10 புள்ளிகள்)

03. "சைவ சமய நூல்கள் உயர்ந்த விழுமியங்களை வலியுறுத்துகின்றன"
    1. விழுமியம் என்பதன் பொருள் யாது?
    2. உண்மையை உணர்ந்த வள்ளல்களைத் திருவள்ளுவர் எவற்றிற்குப் புகழ்ந்துரைக்கின்றார்?
    3. ஈகை பற்றி திருவள்ளுவர் கூறும் கருத்துக்களில் இரண்டினை விளக்குக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

04. "இந்து வாழ்வியலில் பஞ்சாங்கம் பார்த்தல் அவசியமானது"
    1. சந்திரமான முறையில் மாதத்தை கணிப்பிடும் இரு முறைகளும் எவை?
    2. நமது முன்னோர்கள் கையாண்ட ஆண்டுமுறைகள் எவை?
    3. சுக்கில பட்சம், கிருஸ்ண பட்சம் ஆகிய இரண்டிற்கும் விளக்கம் தருக?

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

05. "வேதமோடு ஆகமம் மெய்யாம் இறைவன் நூல்"
    1. வேதங்களின் மறுபெயர்கள் எவை?
    2. சிவனின் திருமுகங்கள் எத்தனை? அவை எவை?
    3. ஆகமங்கள் குறிப்பிடும் விடயங்கள் ஐந்து தருக?

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

06. "ஆன்மீக மேம்பாட்டிற்கு விரதங்கள் சிறந்த சாதனங்களாகும்"
    1. விரதம் என்பதற்கு ஆறுமுகநாவலர் தரும் விளக்கம் என்ன?
    2. மார்கழி திருவாதிரை விரதத்தின் சிறப்புக்கள் மூன்று தருக?
    3. விரதங்களை நோற்பதால் கிடைக்கும் நன்மைகள் 5 தருக?

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

07. மேல்வருவனவற்றில் எவையேனும் இரண்டிற்கு சிறுகுறிப்பு வரைக
    1. பஞ்சாங்கம்
    2. கார்த்திகை விரதம்
    3. திருநீறு
    4. அபரக்கிரியை

(2 x 5 = 10 புள்ளிகள்)